Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (20-12-65) இதழ் 311

விசுவாவசு மார்கழி 5 ஷஃபான் பிறை 26 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க. வைர நகைகளுக்கு



போன் 585 PHONE 585

K. N. M.

மீறன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணத்தில் கிரேக்க கப்பல்

மாவிட்டபுரம், ஞாயிறு

கிரேக்க கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. ''டெர்பிஸ்'' என்ற இக் கப்பல் 91, 942 மூடை பர்மா அரிசியை (6551 தொன்) ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து அரிசி இறக்குமதி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# ஆசிரியர் பிரச்னையில் தமிழரசின் கொள்கை

கள்ளக்கடத்தல்

## ரூ. 20,000 பொருள்கள் கைப்பற்றப்பட்டன

### வல்வெட்டித்துறை சுங்கப்பகுதிக்கு அருகாமையில் சம்பவம்

மாவிட்டபுரம், ஞாயிறு

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற சில இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைக்கு விரைந்து சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று, கொட்டியாள் ஒழுங்கை கடற்கரையில் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருள்களைக் கைப்பற்றியது. நேற்றிரவு நடைபெற்ற இந்த ''வேட்டை'' யைத் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. டி. ஏ. போவியின் மேற்பார்வையில், காங்கேசன் துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெர்னாண்டோ, சட்டவிரோத குடியேற்ற தடுப்பு முகாம் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜபார், வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஹரஸ்கம ஆகியோருடன் கூடிய பொலிஸ் கோஷ்டியொன்று நேற்றிரவு வல்வெட்டித்துறை கொட்டியாள் ஒழுங்கை கடற்கரைக்குச் சென்ற பொழுது அங்கு இருபதினாயிரம் ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருள்கள் கிடக்கக் கண்டனர். முப்பத்தொன்பது கட்டுகள் நைலோன் நூல்களும் பத்தொன்பது டசின் ஒவல்டின்களும் இரண்டு மூடை கராம்பும் கடற்கரையிலிருக்க, பொலிஸார் கைப்பற்றினர்.

இப்பொருள்களைச் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் சிலர் பொலிஸாரைக் கண்டதும் ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதன்பின்னர் பொலிஸார் சந்தேகத்தின்மீது அருகாமையிலுள்ள இரண்டு வீடுகளைச் சோதனையிட்டனர். அங்கு 135 பாக்கு மூடைகளைப் பொலிஸார் கைப்பற்றினர். இதுசம்பந்தமாக நாராயணசாமி ராஜகோபால், துரைராசா சுந்தரதேவி ஆகிய இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருள்கள் வல்வெட்டித்துறை சுங்கப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டவிரோத கடத்தல் சம்பவம் வல்வெட்டித்துறை சுங்கப்பகுதிக்கு அருகாமையில் நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பூநகரிப்பகுதியில்

## புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 12 லட்சம்

### எம். பி. யின் நடவடிக்கை பலனளித்தது

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரிப் பகுதியில் கடலினால் பாதிக்கப்பட்ட வயல்களின் சொந்தக்காரர்களுக்கு, அவர்களின் வயலை பண்படுத்துவதற்காக, கிளிநொச்சி எம் பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் வேண்டுகோளின்படி 12 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இந்த உதவி எவ்விதம் வழங்கப்பட வேண்டுமென ஒரு திட்டம் தயாரித்து அனுப்புமாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரை விவசாய அமைச்சு கேட்டிருந்தது.

மாவட்ட விவசாய கூட்டத்தில், கிளிநொச்சி எம். பி., அரசாங்க அதிபரிடம் இதுபற்றிக் கேட்டபொழுது, விவசாய அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்குஅத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு பண உதவி வழங்குவதை விரைவில் செயல்படுத்துமாறு கிளிநொச்சி எம். பி. விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. மகாதேவாவிற்கு நேற்று அவசரத் தந்தி ஒன்று அனுப்பியுள்ளார்.

## செயற்குழுக் கூட்டத்தில் விபரமும் விளக்கமும்

## தமிழ்ப்பாடசாலைகள்பற்றிமீண்டும் உபகுழு பிரதமரைச் சந்திக்கும்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் பல முக்கிய விஷயங்கள் பற்றி ஆராய்ந்தது. ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னை, தென்னிலங்கையில் தமிழ்பேசும் மாணவர்கள் தாய்மொழி மூலம் கல்வி பெறுவதில் ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி செயற்குழு ஆராய்ந்தது. மாவட்டசபைகள் அமைப்பது, தமிழ்மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவதற்காள ஷரத்துக்கள் கொண்டுவருவதற்கன நடவடிக்கைகள் பற்றியும் இலங்கைப் போக்குவரத்துச்சபையில் செய்யப்படும் சில நியமனங்கள் பற்றியும் கூட்டம் ஆராய்ந்ததாக அறியப்படுகிறது.

தென்னிலங்கையிலுள்ள தமிழ்பாடசாலைகளும் தமிழ் வகுப்புகளும் மூடப்படாமல் தடுப்பதற்கு வடபகுதியிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் திட்டத்தில் தலையிடுவதில்லையென்ற கட்சியின் கொள்கையில் மாற்றம் இல்லையென்றும் இடமாற்றங்களில் தவறு நேர்ந்தால் அதில் தலையிடும் உரிமை உண்டு என்றும் விளக்கம் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

தமிழ்ப்பாடசாலைகள்மூடப்படுவதுபற்றி பிரதமரை முன்னர் சந்தித்த டாக்டர் நாகநாதனின் தலைமையிலுள்ள உபகுழு மீண்டும்இவ்வாரத்தில் அநேகமாகவியாழக்கிழமை பிரதமரைச் சந்தித்துப் பேசுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இலங்கைப் போக்குவரததுச் சபையில் செய்யப்பட்டுள்ள சில நியமனங்கள் குறித்து செயற்குழுவில் கவலையும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

செயற்குழுக் கூட்டத்தின் முடிவை அறிவதற்காக ஆசிரியர் சிலர்கட்சிக்காரியலயத்துக்கு வெளியே நேற்று காணப்பட்டனர்.

## சிரமதானம்

சுழிபுரம், ஞாயிறு

சில்லாலை கிராமாபிவிருத்திச் சங்கத்திற்கான கட்டிடமொன்றை சிரமதானமுறையில் கட்டுவதற்கு வாலிபர்கள் முன்வந்துள்ளனர். சிரமதான வேலைகளில் படித்த வாலிபர்கள் ஈடுபட்டுள்ளனர். டிசம்பர் மாதத்துக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படுமெனத் தெரிய வருகிறது.

## ''பல்கலைக் கழகம் பற்றி விரிவான விசாரணை தேவை'

### தமிழரசுக்கட்சிக்குழுவின் தீர்மானங்கள்

செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக டாக்டர் . ஈ எம். வி. நாகநாதன் தலைமையிலுள்ள குழு வியாழக்கிழமைக்குள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து இவ்விஷயம் குறித்து ஒரு முடிவுமேற்கொள்ளுதல்.

அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி அவற்றுக்கான காரணங்களை மட்டுமின்றி மூலாதார காரணங்களையும் ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை இக்குழு கேட்டுக்கொள்கிறது. இந்த நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி சம்பந்தமான சகல விஷயங்களையும் விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

### பாலசுந்தரத்துக்கு அனுதாபம்

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், காலம் சென்ற முன்னாள் கோப்பாய் எம். பி. திரு. எம. பாலசுந்தரத்தின் மறைவு குறித்து இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

NANDHI Industries and Agencies Ltd.

20, Stanley Road, :: :: Jaffna.

for

CABLES, CASING,

(S-LON P. V. C) CONDUIT PIPES

And All Other

ELECTRICAL GOODS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பிரம்மசரிய விரதமிருப்பவருக்கு தேகசக்தியும் மனோசக்தியும், ஆன்மசக்தியும் வளரும். பிரம்ம சரியதுல்லாதவர்கள் ஆன்மீகப்பாதையில் முன் னேறுவது சிறிதும் சாத்தியமன்று.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 32°

யாழ்ப்பாணம்விசுவாவசுஆண்டு மார்கழி மீ 5 - (20-12-65)

# கொழும்புப் பொதுமக்கள் அளித்த தீர்ப்பு

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி எதிர் பார்த்ததுபோல் வெற்றி பெற்றுள்ளது. ஆனுல் முன் பெற்றிருந்த ஸ்தாபனங்களில் எட்டை அது இழந்திருக்கிறது. இதுவும் எதிர்பார்க்கப்பட்டதுதான்.

இந்தத் தேர்தல் தீர்ப்பை அரசியல் வட்டாரங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்தன. ஏன்? இத்தேர்தல் போட்டிகள் தலைநகரத்தைப் பற்றிய விஷயங்களைப் பற்றியன்றி, அரசியல் கொள்கை அடிப்படையாகக் கொண்டதுடன், தேசிய அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகள் பற்றி மக்களின் தீர்ப்பை அறிய ஒரு முதல் சந்தர்ப்பமாகவும் விளங்கியது. அதனுல் இது அதிக முக்யத்துவம் பெற்றது.

மொத்தம் 47ஸ்தானங்களில் ஏற்கெனவே ஐ. தே. கட்சி நாற்பதைப் பெற்றிருந்தது. சென்ற சனிக்கிழமை தேர்தலில் 32டைத்தான் பெறமுடிந்தது. எட்டு ஸ்தானங்களை அது இழந்திருப்பினும் தலைநகர பொதுமக்கள் அக்கட்சியிடமே நிர்வாகப் பொறுப்பு நீடித்திருக்கத் தீர்ப்பளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. மக்களின் ஆதரவை அக்கட்சியினர் சற்றே இழந்துள்ளதன் காரணமென்ன?

ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு விதத்திலே இதற்கு விளக்கம் செய்யலாம். தேசிய அரசாங்கம் கைக்கொள்ளும் மொழிக் கொள்கையிலே மக்களின் நம்பிக்கை குறைந்து, அதற்கு எச்சரிக்கை செய்வதுபோல் இத்தேர்தல் தீர்ப்பு இருப்பதாயும், எதிர்க்கட்சிகளிடம் தலைநகர மக்களின் நம்பிக்கையும் ஆதரவும் அதிகரித்து வருவதாகவும் எதிர்க்கட்சியினர் கூறக்கூடும். அடுத்த பொதுத்தேர்தலில் தங்களுக்கே வெற்றி என்றும் அவர்கள் ஒருவித நம்பிக்கை கொள்ளவும்செய்யலாம்.

அப்படிக்கருதி, வகுப்புவாதத்தை வளர்த்து, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை மேலும் எதிர்க்க அவர்கள் திட்டம் போட்டு காரியம் செய்யின் அதைவிடப் பெரிய தவறு இருக்கமுடியாது. அதிகாரத்திலுள்ள ஒருகட்சிக்கு ஜனநாயகத் தேர்தலில் ஆதரவு குறைவது சகஜம். நிர்வாகத்திலுள்ள பல குற்றங்குறைகளுக்கு அவர்கள்தானே பொறுப்பு. மேலும் ஜனநாயகம் சரிவர நடைபெற்று அதன் நோக்கம் வெற்றிபெற வேண்டுமாயின் பலமான எதிர்க்கட்சி இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இன்றேல் நிர்வாக ஊழல்கள் மலிந்து பொது நன்மை பாதிக்கப்படும்.

கொழும்பு மாநகரின் பழைய சபையிலே எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருந்தன. ஜனநாயகத்துக்கு இது நல்லதல்லவென்று கருதி, பொதுமக்கள், எதிர்க்கட்சிகளுக்கு இம்முறை சற்றே அதிக ஸ்தானங்கள் அளித்துள்ளனர். ஜனநாயகம் சரிவரநடைபெறவேண்டுமென்றநோக்கத்துடனும் ஆளும்கட்சியினர் அதிக உஷாராக இருக்கவும் நிர்வாக ஊழல்கள் குறையவும்தான் இவ்விததீர்ப்பை அளித்திருக்க வேண்டும். இப்படியன்றி, சிங்களவரின் உரிமைகளுக்குஏதோ ஆபத்து வந்துவிட்டதாகவும், அதைக் காக்கவே தலைநகர மக்கள் தங்களுக்கு அதிக ஆதரவு அளித்திருப்பதாகவும், நினைத்து இனி வகுப்பு வெறியை அதிகமாக்கினுல் அது அரசியல் தற்கொலையிலும் நாட்டுக்கே பெரும் ஆபத்திலும் முடியும். பழைய அரசியல் அனுபவங்கள் இதற்கு நல்லதோர் பாடமாகும்.

இதேசமயம் தலைநகர நிர்வாகப் பொறுப்பை மீண்டும் பெற்றுள்ள ஐக்கியதேசியக்கட்சி, எதிர்க்கட்சியினரை தங்கள் விரோதிகளாகக்கொண்டு அலட்சியம் செய்து ஒதுக்காமல், அவர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே என்பதை ஞாபகத்தில் வைத்து அவர்களதுகருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அவர்களது ஒத்துழைப்பைக் கூடுமானவரை பெற முயலவேண்டும். அந்த ஒத்துழைப்பு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக்கிடைக்கிறதோ அதைப் பொறுத்தே ஜனநாயக வெற்றியும் தலைநகர பொதுமக்களின் நன்மையும் இருக்கும்.

இந்தத் தேர்தலில் போட்டிகள் தீவிரமாக இருந்திருப்பினும் எவ்வித அசம்பாவிதமுமின்றி தேர்தல் அமைதியாக நடந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும். ஜனநாயகத்தில் மக்களுக்குள்ள நம்பிக்கையையும் ஆர்வத்தையும் இது காட்டுவதாகவுள்ளதுடன், இந்நாட்டிலே எதிர்காலத்தில் ஜனநாயகத்தை வெற்றிகரமாக நடத்திவைக்க மக்கள் நல்ல தகுதியும் பெற்றுள்ளனரென்பதற்கு இது நம்பிக்கையான அறிகுறியுமாகும்.

## உணவு உற்பத்தி போட்டி

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட உணவுப் பெருக்கு இயக்கப் போட்டியை முன்னிட்டு வலிமேற்கு பிரிவில் மூன்று பிரிவாகப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காரிபிரிகாரி ந. மாணிக்க நடநாசா, கிருஷிகப் போதனுசிரியர் த. குமாரவேல் ஆகிய இருவரும் கூட்டாகச் சேர்ந்து நடாத்தும் இப்போட்டியில் மிளகாய், வெங்காயம், பம்பாய் வெங்காயம், உருக்கிழங்கு, காய்கறி வகைகள், மற்றும் நெல், நிலக்கடலை போன்ற உணவுப் பொருள் உற்பத்தி செய்வோர் மத்தியில் பெரும் ஊக்கத்தைக் கொடுத்து பரிசுகள் வழங்குவதே முக்கியமான நோக்கமாகும்.

# ஆசிரியர்களை இடமாற்றம்செய்த கல்வி மந்திரிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

ஜனவரி முதலாந் தேதி நடைபெறவிருக்கும் தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றங்களைப் பெரிய பிரச்னையாக்கி தவருன விளக்கங்களையும், கருத்தற்ற எச்சரிக்கைகளையும் கொடுத்து, கல்விப் பகுதியினரையும், அரசியல் தலைவர்களையும், பொதுமக்களையும் குழப்ப நிலைக்குக் கொண்டுவரச் சிலர் இப்பொழுது பெரும் பிரயாசை எடுத்துவருகின்றபோதிலும் வெளிமாகாணங்களிலுள்ள தமிழ்க்குழந்தைகளின் கல்வி நலனைப் பாதுகாக்கவும், அப்பகுதியில் ஆசிரியர் பற்றுக்குறையால் சேவைசெய்யும் ஆசிரியர்கள்மீது சுமத்தப்பட்ட வேலைப்பளுவைக் குறைக்கவும் யாழ்ப்பாணப் பகுதியில் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களில் ஒருபகுதியினரை மாற்றி நீதிவழங்கமுற்பட்ட தேசிய அரசாங்கத்தின் கல்விமந்திரிக்கும், வித்தியாபகுதியினருக்கும் இச்சபை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுநிர்வாக சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. த. ச. சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

உழைப்பிற்காகச் சென்றும் பல கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் சகித்து வெளிமாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளிலும், முஸ்லிம் பாடசாலைகளிலும் தமிழ் ஆசிரியர்கள் சேவை செய்தமையால்தான் தென்னிலங்கையில் உள்ள தமிழ்ப்பிள்ளைகளும், முஸ்லிம்பிள்ளைகளும் தமிழ் மொழியைக் கற்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்பு ஆதியிலிருந்தும் தாராளமாகக்கிடைத்தமையால் அவர்கள் வேற்று மொழி பேசும் மக்களாக மாருது தமிழ்பேசும் மக்களாகத் திகழ்கிருர்கள். அத்தோடு எமது தாய்மொழி தமிழ்மொழி. உயிரைக் கொடுத்தும் தமிழ்மொழியைக் காப்போமென்று உறுதியாக நிற்கிருர்கள். இதனுல் இவ்வாறு வளர்ந்து வந்த தமிழ்மொழியின் செழிப்பையும், தமிழ்பேசும் மக்களின் பலத்தையும் குறைப்பதற்குக் கடந்த சில காலமாக ஆசிரியர் பற்றுக்குறையும், பற்றுக்குறை காரணமாகத் தமிழ்ப்பாடசாலைகள், தமிழ்ப்பிரிவுகள் மூடப்பட்டமையும் உதவியாக இருந்தன. இந்த நிலையை நாமும் வெளிமாகாணங்களிலுள்ள சிலஸ்தாபனங்களும் கல்விப் பகுதியினருக்கு மட்டுமல்ல தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மூதவை உறுப்பினர், உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோரின் கவன திற்கும் கொண்டுவந்தோம். இந்த நிலையை உணர்ந்து 1-1-66ல் நடைபெறவிருப்பது, தென்னிலங்கையிலுள்ள ஆசிரியர் பற்றுக்குறையை நிரப்புவதுமான இடமாற்றங்களில் தலையிடுவதில்லை எனவும், தலையிட்டுக் குழப்பினுல் அது தென்னிலங்கையிலுள்ள தமிழ்க்குழந்தைகளுக்குத் துரோகம் செய்வதாக அமையும் எனவும் தமிழ்த் தலைவர்கள் முடிவு செய்தமையையிட்டு இச்சபை நன்றி தெரிவிக்கிறது.

வெளிமாகாணங்கட்குஇப்போது மாற்றப்பட்டுவரும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலஎல்லையில் சொந்த மாகாணங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென எமது சங்கம் தமிழ் பாராளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்ட கருத்தைஉணர்ந்துநடவடிக்கை எடுக்க முற்பட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருக்கு இச்சபை நன்றி தெரிவிக்கின்றது. பத்து பதினைந்து வருடங்களாக வெளியிடங்களில் சேவை செய்து கஷ்டப்படும் ஆசிரியர்களைப் பற்றி இதுவரை காலமும் கருத்திற் கொள்ளாமை கவலைக்குரிய விடயமாகும். அவர்கட்கு இழைக்கப்பட்ட அநீதி இப்போது மாற்றப்பட்டவர்களுக்கும் இழைக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டமையையிட்டு எமது சங்கம் மகிழ்ச்சியடைகிறது என்பதையும் குறிப்பிடுகிறோம். வெளி மாகாணங்களில் சேவைசெய்யாத ஆசிரியர்கள் வடமாகாணத்தில் இருக்கும்வரை வெளிமாகாணத்தில் நீண்டகாலம் சேவைசெய்தபின் வடமாகாணத்திற்கு மாற்றப்பட்டவர்களைத் திரும்பவும் வெளியிடங்களுக்கு மாற்றக்கூடாதென இச்சபை கௌரவ கல்விமந்திரி அவர்களையும் வித்தியாதிபதி அவர்களையும் வேண்டுகின்றது.

# ஐயாறன் எழுதுகிறது

ஒரு தமிழ்ப் பெண்மணி சுயேச்சையாக நின்று போட்டியிட்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றுள்ளார். உணுப்பிட்டித் தொகுதிக்கு மீனும்பிகை ரத்தினம் அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதைப் பார்க்க மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமுள்ளது.

ஆனுல் யாழ்ப்பாண மாநகரசபையில் ஒரு தமிழ்ப் பெண்மணிகூடஇல்லாததை நினைத்ததும் மனதுக்குப் பெரும் ஏமாற்றம். பெண்களுக்கு ஆண்களைப்போல் வாக்குரிமை உள்ளது. சமூகத்திலும் வாக்காளரிலும் அநேகமாக சரிபாதிப் பேர் பெண்களாவர். அப்படி இருந்தும் நமது நகரசபையிலும், நாடாளுமன்றத்திலும் ஒரு தமிழ்ப்பெண்கூட இல்லை. ஏன்? திறமையான பெண்மணிகள் இங்கு இல்லையா?

ஆண்களைவிட பலவிதங்களிலும் தகுதிபெற்ற பெண்மணிகள் இங்குளர். என்ருலும் தேர்தல் போராட்டங்களில் முன்வந்து ஈடுபட அவர்கள் இன்னும் போதிய துணிவு பெறவில்லை.

தமிழகத்தில் நடந்துள்ள பல ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் பெண்கள் அதிக வெற்றி பெற்றுள்ளதுடன், பல பெண்மகளிர் ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர் பதவிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் திறமையுடன் தங்கள் பொறுப்பை நிறைவேற்றி வருவதாகவும் ஒரு செய்தியைப் பார்த்தேன். அது ஈழத்துப் பெண்களுக்கும் நல்லதோர் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

ஜனநாயகத்தை நன்கு நடத்தும் ஆற்றல் பெண்களுக்குண்டு என்றதாலேயே அவர்களுக்குச் சரிசமமான வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. என்ருலும் அவர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற, அச்சபைகளில் அங்கம்வகிக்க முன்வராதது பெரிய குறையாகும். அவர்கள்போதியஅளவு இருப்பின் நகருக்கும் நாட்டுக்கும் அதிக நன்மை ஏற்பட முடியும்.

இந்தியாவிலும் முதலில் இத்தேர்தல்களில் ஈடுபட பெண்கள் துணிச்சலுடன் முன்வரவில்லை. அதனுல் நாடாளுமன்றங்களில் சில வருட காலத்துக்குப் பெண்களுக்காக சில ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தனர். அதன்பயனுக பெண்கள் கூச்சமும், பயமும் நீங்கி, தேர்தல்களில் போட்டி போட்டு, சட்டசபைகளில் அங்கம் வகித்தனர். பின்னர் ஸ்தானங்களை பெண்களுக்காக ஒதுக்கும் முறையை நீடிக்க அவசியமில்லமல் போயிற்று.

அதேமாதிரி இலங்கையிலும் நாடாளுமன்றத்திலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் முதலில் சில வருடங்களுக்கு சில ஸ்தானங்களையாவது பெண்களுக்காக ஏன் ஒதுக்கக்கூடாது? அரசியல் சட்டத்திலே அவ்வித திருத்தம் செய்ய வேண்டியது பல காரணங்களாலும் அவசியமாகும்.

ஆண்களாக இதைச் செய்வரென்று தோன்றவில்லை. வாக்காளரில் பாதிப்பேர்களாகவுள்ள பெண் சமூகத்தவரே கட்டுப்பாடாகச் சேர்ந்து, இதற்கான கிளர்ச்சிகளைச் செய்தால், அவர்களுக்கு வெற்றி நிச்சயம். இங்கு ஜனநாயகமும் அழகாக முன்னேறி நல்ல

((4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வெற்றிபெற முடியும். இக்கடமையைச் செய்யவே அவர்களுக்கு வாக்குரிமை அளித்துள்ளதென்பதைச் சிறப்பாக நமது படித்த பெண்மணிகளுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

ஃ ஃ ஃ

கொக்குவிலைச் சேர்ந்தவரும் தர்மசிந்தையுள்ளவருமான நீதிராசா அவர்களும் கொழும்புத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது இங்கு பலருக்கும் மகிழ்ச்சி.

தென்னிலங்கையிலே தமிழருக்கு இனி இடமில்லை என்று சில வருடங்களுக்கு முன் அஞ்சினேம். ஆனுல் கொழும்புத்தேர்தலிலே போட்டியிட்டு, தமிழரில் நால்வர் வெற்றிபெறமுடிந்தது, புதிய நம்பிக்கையளிப்பதாகும்.

தேர்தலுக்கு முன் கதிர்வேல் ஆச்சாரியை தெருவில் சந்தித்தேன். தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இம்முறை யு. என். பி. அவரை அபேட்சகராக நிறுத்தவில்லை. ஏன் என்று விசாரித்ததில். அக்கட்சியில் சிலருக்கு திமிர் பிடித்துவிட்டதென்றும் அதனுல் இம்முறை அவர்களது மெஜாரிட்டியும் குறையுமென்றும் சொல்லி சுயேச்சையாக நின்று, ஐ. தே. கட்சி அபேட்சகரைத்தோற்கடித்தார். யாருக்கும் அதிகார மமதையும், திமிரும் பிடித்துவிட்டால் அழிவு வந்துவிடும். இதற்கான எச்சரிக்கையாக, அக்கட்சிக்கு இத்தேர்தல் முடிவுகள் இருந்து அவர்கள் திருந்தவும நல்ல தூண்டுதலாக இருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சேநீவா நித்தலுமெம் பிரானுடைய கோவில் புக்குப். புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித், தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சய போற்றி போற்றி யென்றும், அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும் ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

— அப்பர் அடிகள்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக சுழிபுரம் கிராமசபைத்தலைதர் சுகந்தசுவாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாஷ்கண்ட் பேச்சுக்கள் குறித்து பாகிஸ்தான் அதிபருக்கு அக்கறையில்லை

## சீனுவுடன் சேர்ந்து இந்தியாவை மீண்டும்தாக்கபாக். திட்டமிடுகிறது

### அலகபாத்தில் இந்தியப் பிரதமர் அறிவிப்பு

அலகபாத், டிச. 19

"உத்தேச டாஷ்கண்ட் பேச்சுக்கள் தோல்வியடையுமானுல் அல்லது இந்தப் பேச்சுக்கள் நல்லபலனை அளிக்கத்தவறுமானுல் பாகிஸ்தான் சீனுவுடன் கூட்டுச்சேர்ந்து இந்தியாவுக்கு எதிராக மற்றுமொரு தாக்குதலைநடத்த பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் திட்டமிட்டுவருகிருர் என்றுதான் அர்த்தம்கொள்ளவேண்டியிருக்கிறது" என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

ரங்கூன் செல்லும்வழியில் பிரதமர் சாஸ்திரி அலகபாத்தில் இரு தினங்கள் தங்கியிருந்தார்.

நேற்று மாலை அலகபாத் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

'. டாஷ்கண்ட் பேச்சுக்கள் வெற்றிபெற வேண்டுமென்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம். ஆனுல் பாகிஸ்தான் அதிபரின் போக்கு அச்சத்தைக்கிளப்பிவிட்டிருக்கிறது. அண்மையில் ஐக்கியநாடுகள் சபையில் அவர் உரை நிகழ்த்திய விதம், டாஷ்கண்ட் பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிடாதது எல்லாம் ஒரே ஐயத்தை எழுப்பிவிட்டிருக்கிறது'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினுர்.

''டாஷ்கண்டில் எனக்கும் அயூப்கானுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நல்லபலனை அளிக்குமென்று நாம் எதிர்பாக்கும் அதே நேரத்தில் பாகிஸ்தான் வேறுவிதமாக அதை நோக்குகிறது டாஷ்கண்ட் பேச்சுக்கள் தோல்வியுற்ருல் அதற்குப் பாகிஸ்தான்போக்கேமுழுக் காரணமாக அமையும். சீனுவுடன் கூட்டுச்சேர்ந்த இந்தியாமீது மற்றுமொரு தாக்குதலை நடத்தப் பாகிஸதான் தயாராகியது என்பதுதான் இதன் அர்த்தமாகும்'' என்றும்பிரதமர் சாஸ்திரி கூறினுர்.



## "திறந்தமனதுடன் டாஷ்கண்ட் செல்கிறேன்"

### கராச்சியில் அயூப்கான்

கராச்சி. டிச. 19

தாம் திறந்தமனதுடன் டாஷ்கண்ட் செல்லவிருப்பதாக பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய இடங்களுக்குச் சென்று சுற்று விஜயம் செய்து பல தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்திய அதிபர் அயூப்கான் நேற்று கராச்சி திரும்பினுர்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் அதிபர் அயூப்கான் துருக்கியில் சிறிதுநேரம் தங்கியிருந்தார். அங்கு துருக்கி அதிபரையும் பிரதமரையும் சந்தித்து சிறிது நேரம் அளவளாவினுர்.

கராச்சி திரும்பிய அதிபர் அயூப்கான் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்பொழுது அவர் டாஷ்கண்ட் விஜயம் பற்றியும் குறிப்பிட்டார்.

''இந்திய - பாகிஸ்தானுக்கிடையே நிலவும் நெருக்கடிகள் குறையவேண்டுமென்பதுதான் பாகிஸ்தானின் நோக்கமாகும். உத்தேச டாஷ்கண்ட் பேச்சுக்கள் வெற்றிபெறவேண்டும் என்பதே பாகிஸ்தானின் விருப்பமாகும்'' என்றும் அவர் கூறினுர்.



## 'இந்திய விமானங்கள் அத்துமீறுகின்றன'

### பாகிஸதான் புகார்

கராச்சி, டிச. 10

கிழக்குப் பாகிஸ்தான் வானப் பிராந்தியத்தை இந்திய விமானங்கள் மீறிவருவதாக பாகிஸ்தான் தெரிவித்த புகார்களை இந்தியா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

தனது தவறுகளை மறைப்பதற்காக பாகில்தான் இப்படியான புகார்களைத் தெரிவித்துவருவதாக கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## நியுயோர்க்கில் சுப்ரமண்யம்

நியுயோர்க், டிச. 19

இந்தியஉணவுமந்திரி திரு. சுப்ரமண்யம் நேற்று இங்கு வந்துசேர்ந்தார். இந்தியாவின் உணவுத்தேவை குறித்து அமெரிக்காவுடன் நீண்டகால ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொள்வது குறித்து திரு. சுப்ரமண்யம் பேச்சுக்கள் நடத்துவார்.

## பிரிட்டன் - அல்ஜீரிய ராஜீயஉறவு முறிவு

அல்ஜியர்ஸ், டிச, 19

ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டனுடன் ராஜீயத் தொடர்புகளை முறித்துக் கொள்வதென்று அல்ஜிரியா அறிவித்துள்ளது.

அல்ஜீரியாவுடன் ஒன்பது ஆபிரிக்கநாடுகள் பிரிட்டனுடனை ராஜீயத் தொடர்பு களை முறித்துக் கொண்டன.

## "ஜெமினி-7" பிரயாணிகள் பத்திரமாக திரும்பினர்

ஹவுஸ்டன் (டெக்ஸாஸ்), டிச. 10

''ஜெமினி-7''ல் விண்வெளிக்குச் சென்று வெளிவானில் பவனிவந்து பூமியை பல தடவைகள் சுற்றி சரித்திர சாதனையை நிலைநாட்டிய அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருவரும் நேற்று பத்திரமாகப் பூமிக்குத் திரும்பினர். இலங்கை நேரப்படி நேற்றிரவு ஒன்பது மணிக்கு 'ஜெமினி-7' விண்வெளிக்கப்பல் பூமிக்கு வந்து சேர்ந்தது.

'ஜெமினி-7' பிரயாணிகளான போர்மனும், லொவலும் நல்லசுகத்துடன் இருக்கிருர்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இரு வெண்வெளி வீரர்களும் பதின்மூன்று நாட்களாக உலகை வலம்வந்திருக்கின்றனர். இவர்கள் தொண்ணூறு லட்சம் கிலோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்திருக்கின்றனர்.

இருவரது உடல் நிலைகுறித்து வெளியான முதலாவது வைத்திய அறிக்கையில் இரு விண்வெளி வீரர்களினது தேகநிலையும் நன்ருக இருக்கிறதென்றும் எந்தவிதமான மாற்றமும் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

### ஜோன்ஸன் பாராட்டு

விண்வெளி வீரர்கள் பூமியை வந்தடைந்ததும் அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் இரு வீரர்களையும் டெலிபோனில் தொடர்புகொண்டு தமது பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

### ரஷ்ய அதிபர் பாராட்டு

அதிபர் ஜோன்ஸனுக்கு சோவியத் அதிபர் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் அமெரிக்காவின் விண்வெளி சாதனையைப்பாராட்டியுள்ளார்.

## சமாதானயோசனையா?

### அப்படியொன்றும் வெளியிடவில்லை என்கிறது வட வியட்னும்

ஹமீனேய், டிச. 19

வியட்னும் நெருக்கடி குறித்து சமாதான யோசனை எதையும் வடக்கு வியட்னும் வெளியிடவில்லை என்று வடக்கு வியட்னும் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

''வடக்கு வியட்னும் அதிபர் ஹோ-சி-மின் வியட்னும் நெருக்கடி குறித்து புதிய சமாதான யோசனை ஒன்றை வெளியிட்டிருக்கிருர் என்றும் வியட்னும் பற்றி எங்கும் எவரையும் சந்திக்கத் தயார் என்பதே அவரது புதிய யோசனை என்றும் வாஷிங்டனிலிருந்து வெளியான செய்திகள் கூறின.

இதுகுறித்து அமெரிக்கா பாதுகாப்பு இலாகா ஆராய்ந்து வருவதாகவும் அச்செய்திகள் கூறின. ஆனுல் இதனை வடக்கு வியட்னும் இப்பொழுது மறுத்திருக்கிறது.

''வடக்கு வியட்னும் தனது நிலையிலிருந்து இன்னும் சிறிதளவும் தளரவில்லை. வடக்கு வியட்னுமில் குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்தவேண்டும். தென்வியட்னுமிலிருந்து அமெரிக்க துருப்புகள் வெளியேறவேண்டும் இது உட்பட நான்கு அம்ச கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டாலே பேச்சுவார்த்தைகளுக்கு வட வியட்னும் இணங்கும்'' என்று இந்த செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

## "பாகிஸ்தானின் போக்கு நல்ல பலனை அளிக்காது"

— இந்திய மந்திரி

ஆக்ரா, டிச. 19

''பாகிஸ்தான் அதிபர் அயூப்கானின் அமெரிக்க விஜயம் தோல்வியடைந்துவிட்டதால் வெளிநாட்டு மந்திரி பூட்டோ வாய்மூடி மௌனியாகி விட்டார்'' என்று இந்திய கல்வி மந்திரி சக்ளா நேற்று இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

''அயூப்கானுக்கும் சாஸ்திரிக்குமிடையே டாஷ்கண்டில் நடைபெறவிருக்கும் உத்தேச பேச்சுக்கள் நல்ல பலனையளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாமலிருக்கிறது. பாகிஸ்தானின் விபரீதமான போக்கே அதற்குக் காரணமாகும். நட்புக் கரத்தை நாம் நீட்டினுலும் அதனை ஏற்றுக்கொள்ள பாகிஸ்தான் தயாராகவில்லை. காஷ்மீர் முழுவதையும் எமக்கு கொடுக்காதவரை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் உறவுகள் எப்பொழுதுமே சீர்குலைந்துதானிருக்கும்'' என்றும் திரு. சக்ளா கூறினுர்.

## "அமைதியின் பெரும் காவலர்"

### திம்மையாவின் மறைவுக்கு யுதாண்ட் அஞ்சலி

நிக்கோஸியா, டிச. 19

கடந்த சனிக்கிழமை மாரடைப்பினுல் இங்கு காலமான ஐ. நா. அமைதிப் படைத் தளபதி ஜெனரல் திம்மையாவின் பூதவுடல் இன்றுகாலைஅமைதி படைத் தலைமைக் காரியாலயத்தில் பூரண அரசாங்க மரியாதையுடன் பொதுமக்கள் தரிசனத்துக்கு வைக்கப்பட்டிருந்தது. நாற்புறமும் இராணுவ வீரர்கள் குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்தனர். பல நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் நேரில் வந்து தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

சைப்பிரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினுர்.

### மக்காரியோஸ செய்தி

ஜெனரல் திம்மையாவின் மறைவு குறித்து சைப்பிரஸ் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் திம்மையாவின் திடீர் மரணம் பேரதிர்ச்சியை அளித்ததென்றும், அவர் உண்மையான பணியைக் கடமை உணர்ச்சியுடன் இங்கு ஆற்றியிருக்கிருர் என்றும் தெரிவித்துள்ளார்.

### ராதாகிருஷ்ணன் அனுதாபம்

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் திம்மையாவின் திடீர் மறைவு இந்தியாவுக்கு ஓர் இழப்பு என்றும் அவர் ஒரு தேசிய வீரர் என்றும் தெரிவித்துள்ளார்.

### யுதாண்ட் செய்தி

ஐக்கியநாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் திம்மையா அமைதியின் பெரும் காவலர் என்றும் அவரது மறைவின் மூலம் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### ஐ. நா.வில் அஞ்சலி

ஜெனரல் திம்மையாவின் மறைவு குறித்து ஐக்கிய நாடுகள் மகாசபையில் நேற்று ஒரு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

### ஜெனரல் சௌத்திரி அஞ்சலி

''ஜெனல் திம்மா (திம்மையா) மாரடைப்பினுல் காலமானுரென்ற செய்தியை நான் நேற்று மாலை கேள்வியுற்றதும் அதிர்ச்சி அடைந்தேன். அவர் இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிவாரென்று எதிர்பார்க்கவே இல்லை. திம்மா, எனக்கோ அல்லது இந்தியாவுக்கு மட்டுமோ

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினசபை அங்கீகாரம்

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை பட்டின சபையின் 66-ம் ஆண்டுக்காகிய வரவுசெலவுக் கூட்டம் ஊர்காவற்றுறைப் பட்டின சபைக் காரியாலயத்தில் நடைபெற்றது. படடின சபைத்தலைவர் திரு. வே. சிவசம்பு வரவுசெலவுத்திட்டத்தைச் சபைக்குத் தெரிவித்து இவ்வரவு செலவுத் திட்டம் இப்பட்டின சபையின் இருபதாவது வரவு செலவுத்திட்டமென்றும், கடந்த 19 ஆண்டுகளில்மிகக் கூடுதலான மேலதிகம் கொண்டுள்ள திட்டமென்றும் சபைக்குத் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தின் வரவு ரூபா 83,014.00 என்றும்செலவு ரூபா 72698-00 என்றும் ரூபா 10,316.00 மேலதிக முடையதென்றும், இச்சபை கடன்பகுதியில் பெற்றிருந்த கடனை முற்றுக்கொடுத்து முடித்துவிட்டதென்றும் இப்பட்டின மின்சாரத் திட்டத்திற்கு எட்டு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன்பெற தகுதி இச்சபை கொண்டுள்ளதென்றும் 1966-ம் ஆண்டு முடியுமுன் மின்சாரம் பெறமுடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தவருடங்களின்வரவு செலவுத் திட்ட விபரங்களையும் பரிசீலனை செய்தபின்னர் பட்டினசபைத் தலைவர் சமர்ப்பித்த 1966-ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

---

## இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

சாவகச்சேரி, சனி

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி தமிழாசிரிய சங்க விசேட பொதுக் கூட்டம், மேற்படிசங்கத்தலைவர் பண்டிதர் திரு. கே. தம்பையா தலைமையில், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழவிருக்கும் ஆசிரிய இடமாற்றத்தைத் ஆட்சேபிக்கும் முகமாகப் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன;

''காலத்துக்குக் காலம் மாற்றமடையும் அரசாங்கத்திற்கு மாற்றமடையாத நிரந்தரமான ஆசிரியசங்கப் பிரதிநிதிகளையும், அங்கத்தினராகக்கொண்ட மாற்றச் சபையிற் பரிசீலனை செய்யப்பட்டே ஆசிரிய இடமாற்றம் நடைபெறவேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.''

சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர், அரசினர் பாடசாலை ஆசிரியர் ஆகிய இரு சாராரினதும்சம உரிமை வேறுபாடுகளைநீக்கி அவர்கள் ஒருமுகப்படுத்தப்படுமுன் கலந்து மாற்றுதலை எமதுசங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது''

## தட்டுப்பாட்டை நீக்க யோசனை

உடுப்பிட்டி, ஞாயிறு

''பொதுமக்களின் அத்தியாவசிய தேவைப் பொருட்களான புளி, மிளகாய், உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் முதலியனவற்றிற்கு இன்று தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவை ஐக்கிய பண்டகசாலைகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டும் பொதுமக்களுக்குப் போதிய அளவு கிடைக்கவில்லை. எனவே இவைகளைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வதானல் மொத்த வியாபாரிகளின் தொகை காட்டப்பட வேண்டும்'' இவ்வாறு நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. க. ஞானசுப்பிரமணியம் வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. சி. விஸ்வநாதனல் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் வியாபாரிகளின் பிரச்னைகள் பற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. கே. சேனாதிராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. எஸ். வல்லிபுரம் பேசுகையில்,

இறக்குமதிஉத்தரவு அரசாங்கத்திற்கு மாத்திரமன்றித் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும்கொடுக்கப்படவேண்டும் என்றூர்.

திரு. மு. திருவருட்தேவன் உட்படப் பலர் பேசினர்.

நெல்லியடி பலசரக்கு வியாபாரிகள் அனைவரும், மக்கள்சபை உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

காரியாதிகாரி திரு. ஏ.சி. விசுவநாதன் தமதுரையில், ''சாக்கு தாரை கழித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்வது குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதென்றும் வியாபாரிகளின் பிரச்னை குறித்து தாம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் பேசி ஆவன செய்வதாகவும் தெரிவித்தார்.

## கிணற்றில் விழுந்து குழந்தை மரணம்

அச்சுவேலி, ஞாயிறு

காரைநகர் மேற்கு கிராம சேவையாளர்பகுதியிலுள்ள பத்தர்கேணியைச் சேர்ந்த சுப்பிரமணியத்தின் மூன்று வயது குழந்தை சாவித்திரி தேவி கிணற்றில் தவறிவிழுந்து மரணமானர். கிராம சேவையாளர் சதாசிவம் கனகலிங்கம் விசாரணையை நடாத்தினர். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வே. கந்தசாமி தீர்ப்புவழங்குகையில் தகுந்த பாதுகாப்பின்றி வீட்டு வளவிற்குள் கிடங்குகள் வைக்கக்கூடாதென்றும் ஏனையோருக்கும் இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் எனவும் தெரிவித்து குழந்தைமூச்சுத்திணறி மரணமானதெனக் கூறினர்.

## "அமைதியின் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமானவர் அல்ல. அவர் உலகத்துக்குச் சொந்தமானவர். அவரை உலகம் பூராவுமே அறியும். அவர் ஓர் இந்திய வீரர். அவரது சேவையால் இந்தியா மட்டுமல்ல, பல நாடுகள் பயன் அடைந்திருக்கின்றன இரண்டாவது உலக யுத்தத்தில் மகத்தான சேவையாற்றிப் பல தலைவர்களின் பாராட்டுதல்களுக்கும் இலக்கானவர். அதன் பின்னர் எங்களுக்கு வழிகாட்டியவர். திம்மா 1957ம் ஆண்டு முதல் 1961ம் ஆண்டுவரை இராணுவத் தளபதியாக இருந்தார். அவர் ஓர் உண்மையான போர்வீரர். நாட்டுப் பற்று மிகுந்த தேசிய வீரர் அவர்'' என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் செளத்திரி இந்திய வானெலிக்கு அளித்த விசேஷ பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### அர்ஜன்சிங் அனுதாபம்

ஏர் மார்ஷல் அர்ஜன்சிங் திம்மையாவின் மறைவு குறித்து இந்திய வானெலிக்கு அளித்த விசேஷ பேட்டியில் மாபெரும் தேசிய வீரரை இந்தியா இழந்துவிட்டதென்றும் அவர் ஓர் இந்திய வீரர் மட்டுமல்ல உலக வீரரென்றும் தெரிவித்தார்.





தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




# மாமைட்



Estd: 1929 **S. R. S.** போன்: 296

# ஜவுளி மாளிகை

நத்தார் - புத்தாண்டு
பண்டிகைக்காக
ஏராளமான
**கைத்தறி சேலைகளும்**
**வேட்டி சால்வைகளும்**
எம்மிடம்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரேட், — யாழ்ப்பாணம்.



## ராதா குரு தைலம்




240, வியாதிகளுக்கு மகா சஞ்சீவி
தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி
வயிற்றுவலி, புல்வலி, விஷக்கடி
இருமல், நெஞ்சுச்சளி, வாதம்
வலிப்பு, ஜன்னி, வாய்வுப்-
பிடிப்புகள் முதலிய சகல
வியாதிகளுக்கும் சிறந்தது.

எஸ். சுப்பிரமணியம் அன் கோ
160, செட்டியார் தெரு, கொழும்பு.
53, கே. கே. எஸ். ரோட் (போன்: 541) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**நகரசபை - வவனியா**

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ந் திகதி சனிக்கிழமை காலை 11-00 மணி வரை வவனியா நகரசபையில் திருத்தங்கள் செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்வி விளம்பரங்கள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இக்காரியாலயத்தில் பெறக்கூடிய கேள்வி விளம்பரப் பத்திரங்களிலேயே விண்ணப்பங்கள் அனுப்பப்படல்வேண்டும். 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை திருப்பிப் பெற முடியாத, கேள்வி விளம்பரத்திற்குரிய பணம் ரூ. 50/-ம், திருப்பிப் பெற முடியும். கேள்வி விளம்பரக் கட்டுப் பணம் ரூ. 200/-ம் செலுத்தினால் கேள்வி விளம்பரப் பத்திரங்கள் விநியோகம் செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி விளம்பரதாரர் கீழ்க் கையொப்பமிட்டவருடன் ஒப்பந்தம் செய்த பின்னரே கேள்வி விளம்பரக் கட்டுப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விகளுக்குரிய நிபந்தனைகள் கேள்வி விளம்பரப் பத்திரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

4. அரசாங்க இலாகாக்களில் அல்லது உள்ளூர் அரசாங்க இலாகாக்களில் ரூ. 45,000/-க்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களே இக்கேள்விவிளம்பரத்திற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

5. மேலும் தேவையான விபரங்களை காரியாலய நேரங்களில் இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. கீழ்க் கையொப்பமிட்டவருக்கு எந்தவிதக் காரணங்களும் காட்டாமல் ஒன்றையோ அல்லது முழு கேள்வி விளம்பரங்களையோ ஏற்றுக்கொள்ளாமல் விடவோ அல்லது ஒன்றையோ அல்லது ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்ளவோ அதிகாரம் உண்டு.

(ஒப்பம்)
எம் பொன்னையா,
தலைவர்,
நகரசபைக் காரியாலயம்.

நகரசபைக் காரியாலம்,
வவனியா,
டிசம்பர் 17-1965.

1508

---

**தலையணை உறைகள்**
இறக்குமதிசெய்யப்பட்டது
வர்ணவேலைப்பாடும்
பூ வேலைப்பாடும்
வ. வி. 3-75 வி. வி. 2-90
இன்றே விரையுங்கள்
**டயறம்ஸ்**
54, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.

---



# தபால் ஊழியர் வெற்றி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் அரசாங்க சேவையாளர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், முதன் முறையாக காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலைக் கோஷ்டியும் யாழ். தபால்ஊழியர்கோஷ்டியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் யாழ். தபால்ஊழியர்கோஷ்டி கடுமையான போட்டியின் பின்னர் காங்கேசன்துறைசிமெந்துத்தொழிற்சாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

போட்டிஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களுக்குள் தபால் ஊழியர் கோஷ்டியைச் சேர்ந்த எம் சந்தியா என்னும் முன்னணிவீரர், முதலாவது கோலை ரசிகர்கள் எதிர்பாராத வகையில் உதைத்துத் தள்ளினர். இடைவேளைக்கு ஒருசில நிமிடங்களுக்கு முன்னர் குலேந்திரன் என்னும் முன்னணிவீரர் ஒரு கோலை அற்புதமாக உதைத்தார். இடைவேளையின் போது சிமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டி ஒருகோலும் போடாத வகையில் தபால் ஊழியர் கோஷ்டி 2 கோல்கள் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் நடந்தபோட்டியில்தொழிற்சாலை வீரர்களிடம் ஒரு புது உற்சாகம் காணப்பட்டது. குமாரசாமி என்னும்மத்திய முன்னணி வீரர் யாரும் எதிர்பாராத வகையில் ஒரு கோல் போட்டார். கடைசி நேரத்தில் இவரது முயற்சி பாராட்டக்கூடியதாகும். இப்போட்டிமுடிவில் யாழ். தபால் ஊழியர் கோஷ்டி 2—1 கோல்களால் காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. என். சோமசுந்தரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை காரியாதிகாரி காரியாலயத்தைச்சேர்ந்த திருவாளர்கள் வி. பாலசிங்கம், பி. சேனதிராசா, வி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் முறையே வவனியாக்கச்சேரி, மாந்தை காரியாதிகாரி அலுவலகம், மன்னர் காரியாதிகாரி அலுவலகம் ஆசிய இடங்கட்கு ஜனவரிமுதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

---

**"சிளப் கொட்டன்"**
(SLUB COTTON)
கிளேஸ்ட் கொட்டனுக்கு
ஈடாக வந்திருக்கிறது
15 அழகிய வர்ணங்களில்
கிடைக்கும்
வ. வி. 5-25 யார்
வி. வி. 4-40 யார்
**டயறம்ஸ்**
54, பெரியதெரு, யாழ்ப்பாணம்

---

## மாநகரசபை தேர்தல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கே, எம் சில்வா
ல.ச.ச.க 1053
ஜோசப் சில்வா (சுயே) 232
எஸ் விஜயரத்ன (சுயே) 86
மேலதிகம் 737

### புதிய பஜார்

எம். வின்சன்ட் பெரேரா
ஐ. தே. க. 2369
திருமதி டபிள்யு.
கமலாவதி (கம்யூ) 1305
எஸ். நிஸார் (சுயே) 43
மேலதிகம் 1064

### கிரிலப்பனை

சந்திரலால் சால்கொட
சு. க. 1989
பி. டி. எஸ். ஜெயசிங்கா
ஐ. தே. க. 1962
மேலதிகம் 27

### கிருல

பேர்ணட் சொய்சா
ல.ச.ச.க. 2237
டபிள்யு. சிறிசோம
பெரேரா ஐ. தே., க. 1945
மேலதிகம் 392

### கிராண்ட்பாஸ் வடக்கு

பலீல் கபூர் ஐ.தே.க. 1467
என். அபயவர்த்தன
கம்யூ. 1187
டபிள்யு மனகுமரகே
(சுயே) 122
மேலதிகம் 227

### கொம்பனி வீதி

எம். டி. கிச்சிளான்
ஐ தே. க. 2031
எம். என. சுலைமான்
ல.ச.ச.க. 1139
திருமதிநிகார் கிச்சிலான்
226
எம். எஸ், ஸீடின் 22
மேலதிகம் 1632

### பாமன்கடை மேற்கு

சி. என். பெர்ணண்டோ
ஐ. தே. க. 2044
திருமதி குசலா
அபயவர்த்தன
ல. ச. ச. க. 1216
சு. சேனதிரா (சுயே) 134
மேலதிகம் 828

### பாமன்கடை கிழக்கு

ஆனந்த பிரேமசிங்க
ல. ச. ச. க. 2252
எஸ். சிறிவர்த்தன
ம. ஐ. மு. 1515
மேலதிகம் 737

### அளுத்கடை கிழக்கு

எம். நஸீர்
ஐ. தே. க. 2896
எஸ். ரஸீக் (சு. க.) 1517
மேலதிகம் 1379

### பம்பலப்பிட்டியா

பி. மெண்டிஸ்
ஐ. தே. க. 2253
செல்வி மல்லிகா பெரேரா
ல. ச. ச. க. 783
மேலதிகம் 1470

### லுணுபுகுன

ஜே. பெரேரா
ஐ. தே, க. 2127
ஆர். ஏ. பெர்ணண்டோ
கம்யூ. 1366
மேலதிகம் 761

### வனத்தமுல்லை

எஸ். தர்மசிறிவர்த்தன
சு. க. 2142
எல். ஜெயசேன
ஐ. தே. க. 1569
மேலதிகம் 573

---

**நீங்கள் எதிர்பார்த்ததிலும் குறைந்த விலை!**

| | | வ. வி. | வி. வி. |
|---|---|---|---|
| வெள்ளைப் பொப்ளின் | 36'' | 2-90 யார் | 2-40 யார் |
| வெள்ளை லோங்குளோத் | 42'' | 1-95 '' | 1-60 '' |
| வெள்ளை லோங்குளோத் | 42'' | 2-30 '' | 1-85 '' |
| வெள்ளை கேம்பிறிக் | 42'' | 2-00 '' | 2-40 '' |
| வெள்ளை ஷிடிங் | 54'' | 5-50 '' | 3-90 '' |

**டயறம்ஸ்**
ஒருவருக்கு 6 யார் மட்டுமே
54, பெரிய தெரு :: :: யாழ்ப்பாணம்.

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அரச வீதியில் முத்திரைச் சந்தைக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய, பிரயோசனங்களும், கிணறும் உடைய 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. S. மதியாபரணம், 293, செம்மணி ரோட், நாயன் மார்கட்டு. 1605

### சுதுவல

வி. எம். கூரே
ஐ. தே. க. 1867
வி. ஏ. சமரவிக்கிரமா
கம்யூ. 1389
எஸ். எம். இடாயதுல்ல
சுயே. 154
மேலதிகம் 478

### மாளிகாவத்தை மேற்கு

எம். எச். மொகமட்
ஐ. தே. க. 1682
ஏ. எம். பவுளி சு.க. 1251
வி. எம். ஹுசைன்
சுயே. 246
மேலதிகம் 432

### தெமட்டகொட

பந்துல கொலன
ல. ச. ச. க. 2330
எம். கருணரத்ன
ஐ. தே. க. 1546
மேலதிகம் 784

### மாளிகாவத்தை கிழக்கு

எம். எஸ். எம். சருக்
ல. ச. ச. க. 2237
ஆர். பி. ஹசன்
ஐ. தே. க. 1840
மேலதிகம் 397

### கிராண்ட்பாஸ் தெற்கு

எம். பவுலி
ஐ. தே. க. 2550
கே. பி. சில்வா கம்யூ. 1838
மேலதிகம் 712

### புளுமண்டல்

எம். வீரசிங்க
ஐ. தே. க. 2381
ஈ. பெரேரா
ல. ச. ச. க. 2355
மேலதிகம் 28

## காலி மாநகரசபை தேர்தல் முடிவு

காலி, சனி

காலி மாநகரசபை14வட்டாரங்களில் நடைபெற்ற தேர்தலின் போது 8 ஐ. தே. கட்சி அங்கத்தவர்களும் 3 லங்கா பிரஜா தந்திரக் கட்சி அங்கத்தவர்களும், ஒரு சுதந்திரக்கட்சி அங்கத்தவரும், 2 சுயேச்சை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி காலிக் கிளைத் தலைவர் திரு. டபிள்யு. டி. எஸ். அபயகுணவர்தன ஏற்கனவே போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிபிடத்தக்கது.

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1422

---

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் V. S. S. K. தேநீர்க்கடைக்கும் C. S. K. சந்திக்குமிடையில் கடை ஒன்று விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்க. T. R. P. C/o 87/1 கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம். 1611

---

நல்ல நிலையில் உள்ள யன்மார் டீஸல் என்ஜின் பூட்டிய மீன்பிடி இயந்திரப் படகு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு எஸ். பொன்னுச்சாமி, மயிலிட்டி, காங்கேசன்துறை விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1614

### காணவில்லை

பொ. சிவசம்புவின் N. 104548 இலக்கமுள்ள கூப்பன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கவும். 1613

### தேவை

நெசவு தொழில் தெரிந்த தொழிலாளரும், ஆசிரியர் ஒருவரும் தேவை. விண்ணப்பிக்கவும்: நவஜீவன் நெசவு சாலை, வத்திராயன், செம்பியன்பற்று. 1603

---

அக்கராயன் குளம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்ச்சிப்பொருள் விற்பனவுப் பகுதிக்கு ஒரு மனேஜர் தேவை. ஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராயும், அனுபவமுள்ளவராயும் இருத்தல்வேண்டும். பிணை: காசாக ரூபா 1000/-, ஆதனமாக ரூபா 2000/-. வயது 35-க்குள். சம்பளம் ரூபா 100/- தொடக்கம் ரூபா 125/- வரை, தகுதிக்கேற்ப கொடுக்கப்படும். உறையில் 'மனேஜர் தேவை' என்று குறிப்பிட்டு 29-12-65 -க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1608

### யாருடையது?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் மூன்று அரிசிக் கூப்பன்புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

---



**நத்தார் - புத்தாண்டு பண்டிகைகளை**
முன்னிட்டு
**சகாய விற்பனை**
கண்கவர் டிசைன்களில்
சாறிகளும் றெடிமேட் உடுப்புகளும்
மற்றும்
**பலவிதமான ஜவுளி தினிசுகளும்**
குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.
கையிருப்பு முடியுமுன்
உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவுசெய்ய
அன்புடன் அழைக்கிறோம்.
திருமண வைபவங்களுக்கு தேவையான
**கூறை சாறிகள்**
பலவிதமான டிசைன்களில் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
**மைலன்ட்ஸ்**
115, 117, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்பு, காலி**

# மாநகரசபை தேர்தலில் ஐ. தே. க. வெற்றி

## கொழும்பில் இம்முறை 8 ஸ்தானங்கள் பறிபோயின

பம்பலப்பிட்டி சனி

**இன்று நடைபெற்ற கொழும்பு, காலி மாநகர சபைகளின் தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றியீட்டியுள்ளது. கொழும்பு மாநகரசபையில் உள்ள 47 வட்டாரங்களில் 32 வட்டாரங்களையும் காலி மாநரக சபையின் 15 வட்டாரங்களில் 9 வட்டாரங்களையும் ஐ. தே. கட்சி கைப்பற்றியுள்ளது.**

இரு இடங்களிலும் தேர்தல் வெகு அமைதியாக நடைபெற்றதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய உள்ளூராட்சி திருத்த சட்டத்தின் கீழ் இத்தேர்தல்கள் நடைபெற்றன.

கொழும்பு மாநகரசபை தேர்தலில் சமசமாஜக் கட்சி 6 ஸ்தானங்களையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 4 ஸ்தானங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 1 ஸ்தானத்தையும், சுயேச்சையாளர் நான்கு ஸதானங்களையும் கைப்பற்றியுள்ளனர். காலி மாநகரசபை தேர்தலில் பிரஜா தந்திர கட்சி 3 ஸதானங்களையும், சுதந்திரக்கட்சி ஒரு ஸ்தானத்தையும், சுயேச்சையாளர் இரண்டு ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளனர்,

### கொழும்பு மாநகரசபை

1962-ல் நடைபெற்ற மாநகரசபை தேர்தலில் 47 வட்டாரங்களில் 40 ஸ்தானங்களை கைப்பற்றியிருந்த ஐ. தே. க. இம்முறை எட்டு ஸ்தானங்களை இழந்துவிட்டது.

மேயர் வின்சன்ட் பெரேராவும், பெர்ணுட் சொய்சா, திருமதி விவியன் குணவர்த்தன ஆகியோரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மனைவியுடன் போட்டியிட்ட திரு. கிச்சிளானும் வெற்றியீட்டியுள்ளார். தேர்தலில் புதிதாக போட்டியிட்ட நான்கு பெண்மணிகளில் எவரும் வெற்றிபெறவில்லை, தொழில் மந்திரியின் புதல்வரும் வெற்றிபெற்றவர்களில் ஒருவர். கதிரவேலு ஆச்சாரி, நீதிராசா, ஆர். மகேந்திரா, மீனு இரத்தினம் ஆகிய நான்கு தமிழர்களும் மாநகரசபை அங்கத்தவர்களாகியிருக்கிறார்கள்.

காலி மாநகரசபை புதிய தேர்தல் முடிவுகளின்படி ஐ. தே. கட்சியை, பிரஜா தந்திரக் கட்சி ஆதரிக்கும் என நம்பப்படுகிறது.


**9-வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி விஜிதா கல்யாணி லக்ஷ்மி
(கொழும்பு) (ஹட்டன்) (நாவலப்பிட்டி) (இரத்தினபுரி)
மொடேர்ன் மொடேர்ன் விஜயா
(பதுளை) (பண்டாரவளை) (அம்பாறை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

**எம். ஜி. ஆர். — சரோஜாதேவி**
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
**எங்கவீட்டுப் பிள்**


ஜிந்துப்பிட்டி
ரி. நீதிராசா
ஐ. தே. க. 2649
சிறில் ருகனகே
ல. ச. ச. க. 1006
மேலதிகம் 1643

கொச்சிக்கடை தெற்கு
எம். செயின்
ஐ. தே. க. 2267
எ. சலி (கம்யூ) 1021
மேலதிகம் 1246

வேகந்த
ஏ. டி. ராமநாயக்கா
ஐ. தே. க. 2037
என். எஸ். சில்வா
சு. க. 1510
மேலதிகம் 524

மிலாகிரிய
ஆர். ரூபசிங்கா
ஐ. தே. க. 2216
ஜே. பி. கோமஸ்
சுயே. 834
மேலதிகம் 1382

நாரன்பிட்டிய
ஈ. விக்டர் தாபர
சு. க. 2135

### ஜி. ஜி. க்கு பட்டமளிப்புவிழா

மேற்படி விஷயமாக இன்று மாலை, பாரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் சாவகச்சேரி 'குருபவனத்தில்' ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். 1614


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
2-30 6-30, 9-30 சனி-ஞாயிறு 2-30
S பாலச்சந்தர் - விஜயலக்ஷ்மி
நடித்த
**பொம்மை**

**நியூ காலிங்கன் சினிமா**
(இணுவில்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**நீதிக்குப் பின் பாசம்**


ஆர். எக்கநாயக்கா
ஐ. தே. க. 1342
மேலதிகம் 593

மருதானை
ஜி. டபிள்யு அபயகுணரத்ன
ஐ. தே. க. 1658
ஜி. டி. சி. வீரசிங்கா
கம்யூ. 1278
என். எம். சமீன் (சுயே) 84
மேலதிகம் 350

கொட்டாஞ்சேனை மேக்கு
ஹரிஸ் விக்கிரமதுங்க
ஐ. தே. க. 2236
ஏ. மாஸிலஸ் (சுயே) 804
எஸ். ஜே. டி. சில்வா
கம்யூ. 789
ஈ. ஸி. போல் (சுயே) 57
மேலதிகம் 1432

குப்பியாவத்தை கிழக்கு
எம். எச். இஸாக்
சு. க. 1797
எச், வெலரத்தின
ஐ. தே. க. 1472
மேலதிகம் 324

பஞ்சிகாவத்தை
வை. ஐ. இசத் அகமெட்
சுயே. 1785
எஸ். ஜெயவர்த்தன
சு. க. 1628
வி. எஸ். கூரே
ஐ. தே. க. 1051
ஹெட்டியாராய்ச்சிகே
சுயே. 18
எம். முகைதீன் (சுயே) 3
மேலதிகம் 157

திம்பிரிகசாய
பி. ரொட்றிகோ
ஐ. தே. க. 2111
எஸ். கோரலகே
ல. ச. ச. க 1537
மேலதிகம் 524

ஆமர்வீதி
என். எம். தகா
ஐ. தே. க. 1931
எஸ். ஹமீட் சு. க. 1507
மேலதிகம் 424

மீனும்பிகை ரத்தினம்

உனுப்பிட்டி
திருமதி மீனு இரத்தினம்
சுயே. 1784
கே. சோமபாலா
ஐ. தே. க. 1359
மேலதிகம் 425

அளுத்துகடை மேற்கு
எஸ். எம். எம்.
மொகதீன் ஐ.தே.க. 1628
சாள்ஸ் வேதகன்
கம்யூ 1305
மேதிலகம் 323

வாழைத்தோட்டம்
எச். ஸி. பி. பெரேரா
ஐ. தே. க. 1832
எல். டபிள்யு. பண்டிதா
கம்யூ. 1428
எச். பி. கருணபாலா
சு. க. 23
மேலதிகம் 404

கோட்டை
ஜே. ஏ. காதர்
ஐ. தே. க. 1110
எம். ஜி. குணபாலா
ல. ச. ச. க. 521
எம். புஞ்சிபண்டா
(சுயே.) 19
மேலதிகம் 58

கொட்டாஞ்சேனை கிழக்கு
ஆர். ஏ. ஜே. பெரேரா
ஐ. தே. க. 2024
ரி. பெரேரா ல. ச. ச. க. 1802
மேலதிகம் 222

குப்பியாவத்தைமேற்கு
தே. சமரதாசா
ல. ச. ச. க. 1345

எச். தர்மசேன
ம. ஐ. மு. 1196
டி. ஸி. அபயவர்த்தன
(சுயே) 528
மேலதிகம் 149

வெள்ளவத்தைவடக்கு
ஆர். மகேந்திரா
ஐ.தே.க. 2119
டபிள்யு. ப. துடாவா
ல.ச.ச.க. 1043
சிட்னி வணசிங்கா
ல.ச.ச.க.(புரட்சி) 2 2
மேலதிகம் 1076

ஹவலக் டவுண்
எட்மண்ட் சமரவிக்கிரமா
ஐ. தே. க. 1886
மா. துரைரசா
ல.ச.ச. க 812
மேலதிகம் 1074

மாளிகாகந்தை
ஏ.எம். மாக்கான்மரைக்கார்
ஐ. தே.க. 2131
டபிள்யு. அலக்சாண்டர்
1295
மேலதிகம் 836

பொரளை வடக்கு
ஜி. பெரேரா
ஐ.தே.க 1586
எச். மெண்டிஸ் (சுயே) 1523
மேலதிகம் 333

மட்டக்குளியா
ஆகஸ்டீன் டயஸ்
ஐ.தே. க. 2570
எஸ். விஜயரத்தின
(சுயே) 1422
மேலதிகம் 1148

அளுத்துமாவத்தை
ஏ. ஏ. ஷெரீப் (சுயே) 1915
எஸ். குணதிலகா
ஐ. தே. க. 1201
எம். டி. சில்வா (சு.க.) 1189
மேலதிகம் 714

கொள்ளுப்பிட்டி
பி. சுமதிரத்தின
ஐ. தே. க. 2515
ஆர். பிரேமரத்தின
சு. க. 1187
எஸ். மல்லவராச்சி
ல.ச.ச.க. 322
மேலதிகம் 1328

மகாவத்தை
திருமதி விவியன்
குணவர்த்தன
ல. ச. ச. க. 2111
எஸ். ஜே. அபயரத்ன
ஐ. தே. க. 1790
டபிள்யு. பீரிஸ் (சுயே) 41
மேலதிகம் 321

கறுவாக்காடு
எல். ஜெயசுந்தரா
ஐ. தே. க. 1885
என். பெர்னுன்டோ
சு. க. 808
மேலதிகம் 1077

வெள்ளவத்தைதெற்கு
எம். பீரிஸ் ஐ.தே.க. 1742
ஐ. பெர்னுன்டோ
ல. ச. ச. க. 1055
எவ். தேவபுர
ல.ச.ச.க. (புரட்சி) 315
மேலதிகம் 687

கொச்சிக்கடைவடக்கு
பி. கதிரவேலு ஆச்சாரி
(சுயே) 1,520
ஜி. பிரிட்டோ
ஐ.தே. க. 929
டபிள்யு. லடின்ரோன்
கம்யூ. 588
மேலதிகம் 591

பொரளை வடக்கு
எம். ஜி. மெண்டிஸ்
கம்யூ 2257
டி. சொய்சா
ஐ.தே. க. 1457
மேலதிகம் 800

மோதரை
ஜி. பெரேரா
ஐ.தே.க. 1790

(5-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org